REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 8உ சனி (24—9—55) ★ ★ வெளியூர்: புரட்டாசி 9உ ஞாயிறு (25—9—55) [இதழ் 88

'இராசி பலன்' வெளியிடுவது தடுக்கப்படும்?

புதுடில்லி, செப். 23—

"பத்திரிகைகளில் 'ஜோதிடக் குறிப்புக்கள்' என்ற பெயரில், 'இராசி பலன்' போன்றவை வெளியிடப்படுவது தீங்கு பயப்பதாக இருப்பதால், அவற்றைத் தடுப்பது குறித்து சர்க்கார் யோசித்துக்கொண்டிருக்கின்றனர்,"

என்று, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், செய்திப் போக்குவரத்து உதவி மந்திரி ராஜ்பகதூர் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

மொழிவழி தமிழகத்தின் எதிர்காலம்

'சர்க்காரின் அன்றாட நிர்வாகத்தில் காங்கிரசார் தலையிடக் கூடாது'

பிரதமர் நேரு கூறுகிறார்

கட்டாக், செப். 23—

"சர்க்காரின் அன்றாட நிர்வாகத்தில் காங்கிரஸ்காரர்கள் தலையிடக் கூடாது,"

என்று, பண்டித நேரு எச்சரித்திருக்கிறார்.

காங்கிரஸ் ஊழியர் கூட்டமொன்றில் பேசிய அவர் குறிப்பிட்டதாவது:—

"காங்கிரஸ் செயற் குழுவிற்கு நான் பொறுப்பானவன்; அந்த செயற்குழு, நான் பதவியை விட்டு விலகிவிடவேண்டுமென்று கோருமானால், அதற்காக என்ன காரணம் கூறப்பட்டாலும் ஏற்றுக்கொண்டு நான் பதவியினின்றும் விலகிவிடுவேன்; ஆனால், காங்கிரஸ் செயற்குழு என்னுடைய அன்றாட நிர்வாகம் பற்றிக் குறைகூற முற்பட்டால், அப்போது, நான் பிரதம மந்திரியாகக் காரியமாற்றுவதற்கு முடியாது போய்விடும்"

காங்கிரசார் ஒழுங்கு பற்றி பண்டித நேரு

கட்டாக், செப். 23—

"அந்தக் காலத்தில் காங்கிரசார் ஒருவகையான இராணுவச் சட்டத்தின்கீழ் பணி புரிந்தனர்; காந்தியார்தான் தளபதியாக இருந்தார்; சேவை, ஒழுங்கு இந்தப் பாதைகளிலிருந்து விலகவோ, சட்டத்தை மீறவோ அவர் அனுமதிக்கமாட்டார்;

"ஆனால், இன்று எல்லோரும் தளபதிகளாகி விட்டனர்; சிப்பாய்கள் எவரும் இல்லை; அதனால்தான், காங்கிரசில் ஒழுக்கம் இல்லை,"

என்று, பண்டித நேரு காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

உறுதி மொழிகள் நிறைவேற்றம்!

புதுடில்லி, செப். 23—

"கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் சர்க்கார் வழங்கும் உறுதி மொழிகள் நிறைவேற்றப்படுவது குறித்து உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கும் பழக்கம் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது இப்போது மீண்டும் மேற்கொள்ளப்படும்,"

என்று மக்கள் சபையில், மந்திரி சத்திய நாராயண சின்ஹா தெரிவித்திருக்கிறார்.

'புதிய இந்தியா'வில் இந்தி வெறியர் ஆதிக்கம் வலுக்கும்?

மாநில புனரமைப்புக் குழு அறிக்கை

புதுடில்லி, செப். 23—

வரும் செப்டம்பர் 30-ந் தேதியன்று கையெழுத்திடப்படவிருக்கிற மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கை, இந்தியா வெங்கணும் பரவலான பரபரப்பிற்குக் காரணமாக அமைந்திருக்கிறது.

தமிழகத்தின் எதிர்காலம் குறித்தும், 'குழுவின் சிபாரிசு' என்ற பெயரில் சில தகவல்கள் தரப்படுகின்றன.

தமிழகத்தில் உள்ள மலபார் மாவட்டமும், தென் கன்னட மாவட்டமும் பிரிக்கப்பட்டு, மலபார் கேரளத்துடனும், தென் கன்னடம் ஐக்கிய கர்நாடகத்துடனும் இணைக்கப்பட்டுவிடுமாம்.

ஆனால், ஆந்திரத்தில் உள்ள வடக்கெல்லை தமிழ்ப் பகுதிகளும், திரு—கொச்சியில் உள்ள தமிழ் வட்டங்களும் அந்த மாநிலங்களிலிருந்து பிரிக்கப்பட்டு தமிழகத்துடன் இணைக்கப்படுமா என்பது குறித்து தெளிவான சூசகங்கள் இல்லை.

பொதுவாக, மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள், பலருக்கு ஏமாற்றத்தைத் தரவிருப்பதாக நம்பகமாகத் தெரிகிறது.

பஞ்சாப் மொழிவழி மாநில அமைப்பிற்காகக் கிளர்ந்தெழுந்துள்ள சீக்கியர்களும், பம்பாயைத் தலைநகராகக் கொண்டு மராட்டிய மாநிலம் கோரும் மராட்டியரும் பெரும் ஏமாற்றத்திற்கு ஆளாக நேரிடும் என்று அறியவருகிறது.

ஏனெனில், இப்போதுள்ள பஞ்சாப் மாநிலத்துடன்—பெப்சு, இமாசலப் பிரதேசம், டில்லியின் சில வட்டங்கள்—ஆகியவை இணைக்கப்பட்ட 'மகா பஞ்சாப்' உருவாக்க, குழு சிபாரிசு செய்யுமாம்; இந்த அமைப்பை சீக்கியர்கள் நிச்சயம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

அதே போலவே பம்பாய், ஐதராபாத் ஆகிய மாநிலங்களில் உள்ள மராத்தி பேசும் மாவட்டங்கள்—பம்பாய், சௌராஷ்டிரா, கட்ச் ஆகிய பகுதிகளில் உள்ள குஜராத்தி பேசும் வட்டங்கள்—இவை எல்லாம் ஒன்றுசேர்ந்த பம்பாய் மாநிலம் அமைய குழு சிபாரிசு செய்யப்போகிறதாம்; இந்த அமைப்பை மராட்டியர்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

இரண்டு மூன்று மொழி வழங்கும் பகுதிகள் ஒரே மாநிலமாக அமைவதும், ஒரே மொழி பேசும் மக்களுக்கு இரு மாநிலங்கள் அமைவதுமான விசித்திரம்கூட குழுவின் சிபாரிசுகளால் நிகழக்கூடுமாம்.

துண்டாடப்படவிருக்கும் ஐதராபாத்தில் உள்ள தெலுங்கு வழங்கும் மாவட்டங்கள், 'தனி தெலிங்கானா' மாநிலமாக உருவாகுமாம்.

குழுவின் சிபாரிசுகள் இந்தியாவின் 'ஒற்றுமை'யை மையமாகக்கொண்டே அமையும் என்றும் கூறப்படுகிறது.

உத்தரப்பிரதேசம், பீகார், மகாகோசல், இராஜஸ்தான்—ஆகிய நான்கு பெரும் இந்தி மொழி வழங்கும் மாநிலங்கள், உ. பி.-யின் தலைமையில், வழக்கம்போல, இந்தியாவின் 'தலை விதி'யை நிர்ணயிக்கும் ஆதிக்கம் பெறப் போகின்றன என்பதும் நிச்சயம்தானாம்!

மக்கள் சபையின் அடுத்த கூட்டம்

சோவியத் பிரதமர் வருகையைப் பொறுத்ததாம்!

மக்கள் சபையின் அடுத்த கூட்டம் தொடங்குவது, சோவியத் பிரதமர் புல்கானின் இந்தியா வரும் தேதியை ஒட்டியதாயிருக்குமாம் அவர் நவம்பர் 18-ந் தேதி வருவாரானால் அன்றே கூட்டம் துவங்குமாம்; அவர் வருவதற்கு இரண்டொரு நாள் தாமதமாகுமாயின் கூட்டம், நவம்பர் 21-ந் தேதி துவக்கப்படக்கூடுமாம்.

இறுதி முடிவு இன்னும் இரண்டொரு நாட்களில் மேற்கொள்ளப்படும் என்று தெரிகிறது.

கோவா 'சத்தியாக்கிரகம்' சரியான முறையில் நடைபெறவில்லையாம்!

பண்டித நேருவின் பாய்ச்சல்

கட்டாக், செப். 23—

"கோவாவில் நடைபெற்ற 'சத்தியாக்கிரகம்' சரியான வழிகளில் நடத்தப்படவில்லை;

"அங்கு ஆகஸ்டு 15-ந்தேதி நடைபெற்ற 'சத்தியாக்கிரக'த்தைத் தொடர்ந்து, பம்பாயில் ஒழுங்கு, சட்டம் இவை மதிக்கப்படாமல், பலாத்காரம் கட்டவிழ்த்துவிடப்பட்டது; எனவேதான், 'சத்தியாக்கிரகம்' சரியான வழியில் நடைபெறவில்லை என்று சர்க்கார் எண்ணியது;

"தவறான வழியில் 'சத்தியாக்கிரகம்' செல்கிறது—என்று தெரிந்திருந்தால், காந்தியாரே பல முறை 'சத்தியாக்கிரகத்'தைத் திரும்பப் பெற்றிருக்கிறார்,"

என்று, பண்டித நேரு, இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இரண்டாவது கப்பல் கட்டும் தொழிற்சாலை

இரண்டாம் திட்டத்தின்கீழ் நிறுவப்படும்

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மற்றுமொரு கப்பல் கட்டும் தொழிற்சாலை நிறுவப்படும்,"

என்று, உதவி உற்பத்தி மந்திரி சதீஷ் சந்திரா மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

"கப்பல் போக்குவரத்து நிறுவனங்களுக்குக் கடன் தருவதற்கென இந்திய சர்க்கார் ரூ. 23 கோடி ஒதுக்கியிருந்தனர்; இப்போது அந்த அளவைக் காட்டிலும் ரூ. 4 கோடி அதிகம் கடன் தர வேண்டியிருக்கும்,"

என்று, உதவி போக்குவரத்து மந்திரி ஒ வி அழகேசன் தெரிவித்திருக்கிறார்.

சர்க்காருக்கு எதிராக வாக்களித்த ஆளும் கட்சி பிரதம 'கொரடா'

பம்பாய் சட்டசபை விநோதம்!

பூனா, செப். 22—

சர்க்கார் கட்சியின் பிரதம 'கொரடா' சர்க்காருக்கு எதிராக சட்டசபையில் வாக்களித்த சம்பவம் பம்பாய் சட்டசபையில் நடைபெற்றிருக்கிறது.

பம்பாய் சர்க்காரின் 1948-ம் வருடத்திய குடிவாரச் சட்டத்தைத் திருத்துவதற்காக பம்பாய் சர்க்கார் கொண்டுவந்த திருத்த மசோதாவிற்கு, எதிர்க்கட்சியில் உள்ள உறுப்பினர் ஒருவர் திருத்தம் கொண்டுவந்திருந்தார்.

அவர் தனது திருத்தப் பிரேரணையைத் திரும்பப் பெற்றுக்கொள்ள அனுமதி வேண்டும் என்று சபையில் கேட்டார்.

தலைவரும், வாய்மொழி வாக்கெடுப்பு மூலம், 'நிலம் உழுபவருக்கே' என்ற மசோதாவின் ஒரு பிரிவிற்கு வந்த திருத்தம் குறித்து உறுப்பினர்களின் கருத்தை அறிவதற்கு முற்பட்டார்.

திருத்தம் திரும்பப் பெறப்படுவதை யார் ஆதரிக்கிறார்களோ, அவர்கள் எல்லாம், 'ஆம்' என்று கூறுமாறு கேட்டார், சபைத் தலைவர்; எதிர்க் கட்சியினரும், காங்கிரசாரும் அவ்வாறே செய்தனர்;

எதிர்ப்பவர்கள், 'இல்லை' என்று கூறுமாறு கேட்டார் தலைவர்;

சர்க்கார் கட்சியின் பிரதம கொரடா, உடனே 'இல்லை' என்று உரக்கக் கூவியிருக்கிறார்.

'அவர், சர்க்காருக்கு எதிராக வாக்களிக்கிறார்,' என்பதை, ரெவினியூ மந்திரி திருத்தியிருக்கிறார்.

கொரடாவைப் போலவே, மற்றொரு காங்கிரஸ் உறுப்பினரான தலியார்கான் என்பாரும், சபை நினைவு அற்றவராய்—என்ன நடக்கிறது என்பதையே அறியாதவராய்—சர்க்காருக்கு எதிராக வாக்களித்து, பின்னர் வருத்தம் தெரிவித்துக் கொண்டாராம்!

'பெல்லாரியைக் காக்க கன்னடியர் எல்லா தியாகமும் புரிவர்!'

பெல்லாரி, செப். 23—

பம்பாய் சட்டசபையில் உறுப்பினராயுள்ள ஹல்லெக்கெரி என்பார், கர்நாடக நடவடிக்கைக் குழுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில்,

"மாநில புனரமைப்புக் குழுவினர், பெல்லாரி ஹோஸ்பெட், சிறுகுப்பா வட்டங்களை ஆந்திரத்துடன் இணைக்க சிபாரிசு செய்வார்களேயானால், பெல்லாரி மாவட்டத்தில் உள்ள எட்டு இலட்சம் கன்னடியர் மட்டுமின்றி, கர்நாடகத்தில் உள்ள 2 கோடி கன்னடியரும் கிளர்ந்தெழுந்து, கர்நாடகத்திலிருந்து அந்தப் பகுதிகள் பிரிந்துபோகாமல் காப்பாற்ற இறுதிவரை போராடுவர்—இதற்காக ஏற்கனவே நடவடிக்கைகளுக்கான திட்டமும் தீட்டியாகிவிட்டது," என்று குறிப்பிட்டிருக்கிறார்

"பெல்லாரியை கர்நாடகத்துடன் இணைத்து வைப்பதற்குக் கன்னடியர் எல்லாவகையான தியாகமும் புரியச் சித்தமாயிருக்கின்றனர்," என்று அதமேதி ஆண்டனப்பா என்பார் பேசியிருக்கிறார்.

★

பண்டித பந்த் அறிவிப்பு

மக்கள் சபையில் குழுவின் சிபாரிசுகள் பற்றிப் பேசுகையில் உள்நாட்டு மந்திரி பந்த், குழுவினர் சிபாரிசுகளை தாக்கல் செய்தவுடன், நிச்சயம் அவை காலந்தாழ்த்தப்படாமல் வெளியிடப்படும் என்றும், மக்கள் சபைக்கு அந்தச் சிபாரிசுகள் குறித்து விவாதிக்க முழு அதிகாரம் உண்டென்றும், மக்கள் சபையின் அங்கீகாரம் இன்றி மாநிலங்களின் அமைப்பில் மாற்றம் செய்ய இயலாது என்றும் தெரிவித்திருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 24—9—'55 சனி

எப்படி முடியும்?

"எங்கள் நேருவுக்கு எங்கெல்லாம் எப்படிப்பட்ட வரவேற்பும் வாழ்த்தும், விருந்தும் வைபவமும், பாராட்டும் புகழும் தரப்படுகிறது தெரியுமா?"

"முதலாளித்துவ நாடான அமெரிக்காவில், ஜனநாயக நாடான இந்தோ-சீனாவில், 'புதிய ஜனநாயகம்' கண்ட செஞ்சீனத்தில், இராணுவ ஆட்சி நடக்கும் எகிப்தில், பொதுவுடைமை மணம் கமழும் ரஷ்யாவில்—இங்கெல்லாம் எங்கள் நேருவுக்குத் தரப்பட்ட மரியாதையும், வரவேற்பும், பாராட்டும் சாமானியமானவையா? அப்படிப்பட்ட பண்டித நேருவின் ஆட்சியையா குறை கூறுகின்றீர்? ஆகுமா? அடுக்குமா?"

என்று பேசி, எதிர்க் கட்சியினரைத் தாக்கிவிட்டதாகத் தாங்களே மன மகிழ்வுபெறும் தேசியத் தோழர்கள், 'அப்படிப்பட்ட பண்டிதரின் தலைமையில் இயங்கும் இந்தியப் பேரரசு, தனது திறமையின்மையினால்—முன் யோசனைக் குறைவால், ஏழை எளியவரிடமிருந்து—அவர் தம் மிருக உழைப்பின் மிகக் குறைந்த பலனிலிருந்து வரியாகப் பிடுங்கப்பட்ட தொகையில் கோடிக் கணக்கான ரூபாயைப் பாழடித்து வருவதை உணர வேண்டும்,' என, நாம் அவ்வப்போது இங்கு எடுத்துக்காட்டி வந்திருக்கிறோம்.

இந்தியப் பேரரசு, வெளிநாட்டவருடன் வர்த்தக பேரம் பேசுவதிலோ, உள்நாட்டில் தொழில்கள் துவங்குவதற்காக வெளிநாட்டவரின் தொழில் நுணுக்க உதவி பெறுவதிலோ அவற்றிற்காக மேற்கொள்ளும் ஒப்பந்தங்கள் திட்டவட்டமானவையாக—தெளிவானவையாக தீட்டவில்லை என்பதும், பின் விளைவுகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ளும் கவலை சிறிதும உடையவர்களாயிருக்கவில்லை என்பதும், இந்திய சர்க்காரின் பிரசித்தமான திறமைக்குறைவை நிலைநாட்டுகின்றன.

இயந்திர சாதன உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றைத் துவங்கினர், இந்திய சர்க்கார்; ஐந்து கோடி ரூபாய் வரையில் அந்தத் தொழிற்சாலைத் துவக்கத்திற்காகச் செலவிட்டனர். அதனை நிறுவுவதற்காக சுவிஸ் நாட்டு நிறுவனம் ஒன்றின் உதவிக்காக ஒப்பந்தம் செய்தனர். ஆனால், பலன் என்ன? தொழிற்சாலை வேலை துவங்கவில்லை; பலன் எதும் தரவில்லை.

காரணம் என்ன சொல்கிறார், அமைச்சர் கட்ஜு தெரியுமா? 'நம்மிடம் போதமான நிபுணர்கள் இல்லை—தொழிற்சாலையை இயக்குவதற்கு!'— இதுதான் காரணமாம்!

வாங்கப்பட்ட இயந்திரங்கள் தூங்குகின்றன — அதாவது, 'ஆயுத பூசைப்' பொருள்களாக இருக்கின்றனவாம். வெளிநாட்டுகம்பெனி, தொழிற்சாலையை நிறுவி, அதனை இயக்குவதற்கு, இந்தியர்களுக்குப் போதுமான பயிற்சியளிக்கத் தவறிவிட்டதாம். இந்த நிலையினால் ரூபாய் ஐந்து கோடி பாழ்! இதற்கு யாரைப் பொறுப்பாளியாக்குவது; சுவிஸ் நிறுவனத்தைப் பொறுப்பாளியாக்குவதா என்றால், அவர்கள் என்ன செய்வர், இந்திய சர்க்கார் மேற்கொண்ட 'இலட்சண'மான ஒப்பந்தத்திற்கு?

இதுமட்டுமல்ல — அண்மையில் வெளியான ஊழல்கள்!

"இந்துஸ்தான் கப்பல் கட்டும் தொழிற்சாலை என்ற பெயரில் விசாகப்பட்டிணத்தில் ஒரு தொழிற்சாலை துவக்கப்பட்டது. இந்தத் தொழிற்சாலையை இயக்கவும், நிர்வகிக்கவுமான தொழில் நுணுக்க உதவி செய்ய பிரெஞ்சு கப்பல் கட்டும் தொழில் நிறுவனம் ஒன்றுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் திருப்திகரமாக வேலை செய்யவில்லை. தொழிற்சாலையில் கப்பல் கட்டும் வேலை எதிர்பார்த்தபடி நடைபெறவில்லை," என்று, மக்கள் சபையில் கூறப்பட்டிருக்கிறது.

"எதிர்பார்த்தபடி, கப்பல்கள் தொழிற்சாலையில் கட்டி முடிக்கப்படாததால் ஏராளமான பணம் 'கம்பெனி'க்கு நஷ்டமாகியிருக்கிறது; இதற்குக் காரணம், உதவி புரிய ஒப்புக் கொண்ட பிரெஞ்சு நிறுவனம்தான்," என்று மதிப்பீட்டுக் குழு கூறுகிறது. ஆனால் அவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தம், இந்த நஷ்டத்தை அந்தப் பிரெஞ்சு நிறுவனத்திடம் கோரமுடியுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இந்திய சர்க்கார் இப்படித் தெளிவில்லாத முன்யோசனையும், பின் விளைவுகளைப் பற்றிய சிந்தனையுமில்லாத ஒப்பந்தம் மேற்கொள்ளுவது, இது அல்ல முதல் முறை; இந்தியப் பேரரசு வெளிநாட்டு நிறுவனங்களுடன் வர்த்தக நோக்குடனே, அல்லது தொழில் நுணுக்க உதவி பெறும் நோக்குடனே மேற்கொண்ட எந்த ஒப்பந்தம தான் இப்படி ஊழல் இல்லாததாக இருந்தது?

இப்படிப் பொதுமக்களின் வரிப் பணம் கோடிக் கணக்கில் பாழாகிக் கொண்டிருக்கிறது; 'ஆண்டுகள் வளர வளர அனுபவம் வளரும்—திறமை மிகும்—ஆட்சி சிறக்கும்,' என்று எதிர்பார்க்கப் படுவதற்கு மாறாக, இந்த 'சுதந்திரப் புருஷர்'கள் நடத்தும் ஆட்சியில் அலங்கோலம்தான் பெருகுகிறது; மக்களின் வரிப் பணம் பாழாகும் நிலைதான் வளருகிறது.

இந்த ஊழல்களை எல்லாம் ஒழித்து, ஒரு நல்லாட்சி நிறுவுகிற—கூரை ஏறிக் கோழி பிடிக்க இயலாதிருக்கும் பண்டித நேரு, தான் அகில உலகம் சுற்றி சமாதானத்தை நிலைநாட்டுகிற—வானத்தைக் கீறி வைகுந்தம் காட்டும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார் — என்று நமது தேசியவாதிகள் கூறிப் பெருமைப்படுகின்றனர்; நாமும் பெருமைப்பட வேண்டும்—என்று எதிர்பார்க்கின்றனர்; எப்படி முடியும்?

பெரும்வெள்ளம் வருமுன் எச்சரிக்கை!

கம்பியில்லாத் தந்தி மூலம் செய்தி அனுப்பப்படும்

இந்தியாவின் முக்கிய நதிகளில் பெரும் வெள்ளங்கள் ஏற்படுமென்பதை முன்கூட்டியே அறிந்து மக்களுக்கு முன்னெச்சரிக்கை தருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

பூட்டான், நேப்பாளம், சிக்கிம் ஆகிய நாடுகளின் உடன்பாடுடன் அங்கே பல நிலையங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகி விட்டன.

நதிகளின் ஆரம்பப் பகுதிகளில் உள்ள மழை நிலவரம், தண்ணீர் ஆழம் முதலிய தகவல்கள் முன்னதாகத் தெரியவந்தால், நதிப் பள்ளத்தாக்குப் பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு வெள்ளங்கள் பற்றி முன்னெச்சரிக்கை தருவது சாத்தியமாயிருக்கும். அத்தகவல்கள் கம்பியில்லாத் தந்தி மூலம் அறிவிக்கப்படும்.

பூட்டானில் 10 மழை அளப்புக் கருவி நிலையங்களும், 6 நதி அளப்புக் கருவி நிலையங்களும், 6 கம்பியில்லாத் தந்தி நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அடுத்த ஆண்டு பருவ மழைக் காலத்துக்குமுன் இன்னும் பல நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

குத்துச் சண்டையில் ரூ. 44,65,000 வசூல்!

62,000 மக்கள் திரண்டனர்

நியூயார்க், செப். 22—

உலகக் குத்துச் சண்டை வீரருக்கான (சாம்பியன்ஷிப்) போட்டி இங்கு நடைபெற்றபோது, சுமார் 62,000 மக்கள் அரங்கில் திரண்டிருந்தனராம்; அதுமட்டுமின்றி, ஆயிரக்கணக்கானவர்கள், 'டெலிவிஷன்' மூலமும் பார்த்தனராம்.

உலக வீரரான ராக்கிமார்ஷியானோவிற்கும்—ஆர்ச்சி மூர் என்பவருக்கும் இடையே ஏற்பட்டிருந்த அந்தக் குத்துச் சண்டைப் போட்டியில், 9-வது ரவுண்டிலேயே 'நாக் அவுட்' கொடுத்து, ஆர்ச்சி மூரைக் கீழே வீழ்த்தினாராம், ராக்கி மார்ஷியானோ!

இப்போட்டியின் மூலம் 9,40,000 டாலர்கள் (சுமார் ரூ - 44,65,000) வசூலாயிற்றாம்; இவ்வசூல் தொகையில் 40 சத விகிதத்தை மார்ஷியானோவும், 20 சத விகிதத்தை ஆர்ச்சியும் பெறுவர்.

187 ராத்தல் எடையுள்ள மார்ஷியானோவிற்கு 31 வயதாகிறது; இப்போட்டியில்லாமல் இதுவரை 48 தடவைகள் அவர் போட்டியிட்டு எல்லாவற்றிலும் வெற்றி பெற்றார்; 42 - பேர்களை 'நாக் அவுட்'டினால் வீழ்த்தினார்.

185 ராத்தல் எடையுள்ள ஆர்ச்சிமூருக்கு 38 வயதாகிறது; 144 தடவைகள் போட்டியிட்டு, 120 சண்டைகளில் வெற்றி பெற்றார்; 19 போட்டிகள் தோல்வியிலும், 5 போட்டிகள் சமமாகவும் முடிந்துள்ளன.

பாண்டுங் மாநாட்டின் பலன்கள் மதிப்பிடப்படும்?

கோத்தலாவலை கோரிக்கை

கொழும்பு, செப். 23—

பாண்டுங் மாநாட்டின் பலன்களை மதிப்பிடவும், உலகத்தின் தற்போதைய நிலைமை குறித்து விவாதிக்கவும் மற்றொரு மாநாடு நடத்துவதற்கு இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை விரும்புகிறார்.

இதற்காக, இந்தியா, பர்மா, இந்தோனேஷியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் யோசனையை அவர் நாடியிருக்கிறார்.

சென்னை சட்டசபையில் கேள்வி நேரம்

மாநிலங்களுக்கிடையே விற்பனை வரி

1954-ம் ஆண்டில், மாநிலங்களுடன் வர்த்தகம் செய்ததால், ரூ 9,19,235 வசூலிக்கப்பட்டதென்றும், இந்த வரியை வசூலிக்கக் கூடாதென்று இந்திய உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துவிட்டதால், இது பற்றி விரிவாக ஆராயப்பட்டு வருகிறதென்றும் ரெவினியூ மந்திரி அறிவித்தார்.

* * *

பருத்தி சூதாட்டம்: கைது செய்யப்பட்டோர் எண்ணிக்கை

பருத்தி விலைகள் மீது சூதாடியதாக 1953-ம் ஆண்டில் 2,920 பேர்களும், 1954-ம் ஆண்டில் 4,569 பேர்களும் கைது செய்யப்பட்டதாக நிதி மந்திரி கூறினார்.

* * *

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம்

ஆரணியாறு திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க ஒரு திட்டம் பரிசிலனை செய்யப்பட்டு வருகிறதென்றும், ரூ 5,76,000 செலவில் நிவாரண வேலைகள் திட்டமிடப்படுகின்றனவென்றும் ரெவினியூ மந்திரி கூறினார்.

* * *

பாரி கம்பெனிக்குக் கிடைத்த 'கமிஷன்?'

"கோழிக்கோடிலுள்ள சர்க்கார் தொழிற்சாலையில், 1954—55-ம் ஆண்டில், மொத்தம் 1,62,212½ பவுண்டுமீன் எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டது; பாரிகம்பெனியார் தான் இதற்கு முழு உரிமையுள்ள ஏஜெண்டுகள்; சென்ற ஆண்டில் இந்தக் கம்பெனிக்குக் கிடைத்த கமிஷன் தொகை ரூ 16,800 ஆகும்," என்று விவசாய மந்திரி தெரிவித்தார்.

* * *

அரிசனங்களுக்குக் கோயில் தருமகர்த்தாக்கள் பதவி

"தஞ்சை மாவட்டத்திலுள்ள கோயில்களில் மொத்தம் ஏழு தருமகர்த்தாக்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்; இவ்வருடத்தில் எவ்வளவு பேர் நியமிக்கப்படுவரென்று கூற இயலாது; கோயில்களுக்கு ஒரு அரிசன வகுப்பினரைக் கட்டாயமாக தருமகர்த்தாவாக நியமிக்கும்படி கட்டாயம் செய்வதற்கில்லை; இது, குடியரசுச் சட்டத்திற்கு ஒருவேளை விரோதமாக இருக்கலாம்; என்றாலும், ஒரு நடைமுறை காரியமாக இப்பிரச்சினை பின்பற்றப்பட்டு வருகிறது," என்று, அறநிலையப் பாதுகாப்பு மந்திரி அறிவித்தார்.

* * *

சேலம் மாவட்டத்தில் அலுமினியக் கனிப் பொருள்

சேலம் மாவட்டத்தில் பச்ச மலையிலும், கொல்லி மலையிலும் அலுமினியக் கனிப் பொருள் இல்லையென்றும், ஆனால், சேர்வராயன் மலையில் அலுமினியக் கனிப் பொருள்கள் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்றும் விவசாய மந்திரி தெரிவித்தார்.

தேன் உற்பத்தி அதிகரிப்பு

சென்னை சர்க்கார் திட்டம்

ஒவ்வொரு மாவட்டத்திலும், தேனீக்கள் பராமரிப்பு நிலையங்கள் திறப்பதின் மூலம் தேன் உற்பத்தியை அதிகரிப்பதற்கான விரிவான திட்டம் ஒன்றை, சென்னை சர்க்கார் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு இந்தியப் பேரரசிற்கு அனுப்பி வைத்திருக்கின்றனராம்.

மத்திய சர்க்காருடையவும், திட்டக் குழுவினுடையவும் ஒப்புதலைப் பெற வேண்டியுள்ள அந்தத் திட்டம், சுமார் ரூ 45 இலட்சம் மதிப்புடையதாம்.

திட்டத்தின் பல அம்சங்களுள், கொடைக்கானலில் தேன் உற்பத்தி பற்றிய ஆராய்ச்சிக்கான முகாம் ஒன்றை அமைப்பதும் ஒன்றாகும்.

ராஜ்யங்கள் சபையில் கேள்வி நேரம்

4,700 கிராமங்களுக்கு மின்சார வசதி

இவ்வாண்டில் சுமார் 4,700 கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து தரப்படுமென அறிவிக்கப்பட்டது.

ஃ ஃ ஃ

பிஜித் தீவில் 1,60,000 இந்தியர்களாம்

"அடுத்த ஆண்டு முதல் பிஜித் தீவில் வசிக்கும் இந்தியர்களுக்கு 'வாச கால' வரி ரத்து செய்யப்படும்; அங்கு 1,60,000 இந்தியர்கள் வசிக்கின்றனர்," என்று பிரதம மந்திரியின் பார்லிமெண்டரி காரியதரிசி கூறினார்.

ஃ ஃ ஃ

30,000 'டைப்ரைட்டர்'கள் உற்பத்தி செய்யப்படுமாம்!

"இந்தியாவில் மூன்று நிறுவனங்கள் 'டைப்ரைட்டர்'கள் உற்பத்தி செய்கின்றன; ஓராண்டிற்குத் தேவைப்படும் 30,000 'டைப்ரைட்டர்'கள் இந்த நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது," என்று, வர்த்தக மந்திரி அறிவித்தார்.

ஃ ஃ ஃ

சர்க்கரை சுத்திகரிப்பு ஆலைகள் கிடையாதாம்!

"சர்க்கரை அபிவிருத்திக் கவுன்சில் சர்க்கரை சுத்திகரிப்பு ஆலைகள் ஏற்படுத்தும் யோசனையை ஆட்சேபிப்பது உண்மைதான்; ஆகவே, சுத்திகரிப்பு ஆலைகள் ஏற்படுத்தும் யோசனை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது," என்று, டாக்டர் பஞ்சாப்ராவ் தேஷ்முக் கூறியுள்ளார்.

மரணவாயிலிலிருக்கும் இரு தமிழர்கள்

கருணை காட்டக் கோரிக்கை

கோலாலம்பூர்—

இங்கு இந்த ஆண்டுத் துவக்கத்தில், இராமசாமி என்று பெயர்களுடைய இரு தமிழர்களை, 'அவர்களிடம் ஆயுதமிருந்தது—அவர்கள் பயங்கரவாதிகள்,' என்று கூறிக் கைது செய்து, மரண தண்டனை விதித்திருந்தனர் — நெருக்கடி நிலைச் சட்டங்களின்படி!

இப்போது, பொதுவாகவே எல்லா மலேயா 'புரட்சி'க்காரர்களுக்கும் மன்னிப்பு வழங்குவதென மலேயா சர்க்கார் அறிவித்திருப்பதால், அவர்கள் இருவருக்கும் கருணை காட்டி அவர்களை விடுவிக்க வேண்டுமென மலேயாவில் உள்ள இந்தியக் கமிஷனர் ஆர். கே. தாண்டன் ஜோகூர் மன்னரிடம் ஒரு கருணை மனுவைத் தாக்கல் செய்திருப்பதாகத் தெரிகிறது.

பவானிசாகர் தண்ணீர்

மேலும் 53,000 ஏகருக்குக் கிடைக்கும்

ஈரோடு, செப். 20—

நீர்ப்பாசனத்திற்காகக் கடந்த செப். 15-ம் தேதிமுதல், பவானி சாகரில் தண்ணீர் விடப்படுகிறது.

சென்ற ஆண்டு 1,14,000 ஏகருக்கு மட்டும் பவானியிலிருந்து பாசன வசதி கிடைத்தது.

இந்த ஆண்டு, மேலும் 53,000 ஏகருக்குப் பாசன வசதி கிடைக்கும்.

இந்தத் தண்ணீர் சோளம், பருத்தி இவற்றின் விளைச்சலுக்குப் பயன்படுத்தப்படும்.

மூன்று ஆண்டுகளுக்கு ஒத்திவைப்பு

பறவைகள், மிருகங்கள் பலியிடுவதைத் தடை செய்யும் 1950-ம் ஆண்டுச் சட்டத்தை, கோவில்களுக்கு வெளியிலேயும் பரவலாக்கும் பிரச்சினையை மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு எடுத்துக்கொள்வதென சென்னை சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர்,

ரூ. 60 கோடியில் இரயில்வே சாதனம்!

1956 — 57-ம் ஆண்டிற்குத் தேவையான இரயில்வே சாதனங்களை வாங்கும் திட்டத்தின் கீழ், ரூ. 60 கோடிக்கு மேல் மதிப்புள்ள வாகன்களை வாங்குவதற்கு இரயில்வே போர்டு உத்தேசித்துள்ளதாம்.

இத்தொகையில் சுமார் ரூ. 30 கோடி மதிப்புள்ள வாகன்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும்; மற்ற தேவைகளை இந்திய உற்பத்தியாளர்களே பூர்த்தி செய்யக்கூடுமாம்.

சென்னைக்கு 'டிராலி பஸ்'

புதுடில்லி, செப். 22—

"டிராம்கள் ஓடாத, அல்லது ஓடிக்கொண்டிருந்து நின்றுவிட்ட இடங்களில், ஓரளவு 'டிராலி பஸ்' விடுவதற்கு என்ன செலவாகும் என்பதைக் கண்டறியுமாறு சென்னை, பம்பாய் சர்க்கார்கள் கோரப்பட்டிருக்கின்றன;

'டீசல்' எண்ணெயில் பஸ் விடுவதைக் காட்டிலும் மின்சார பஸ் விடுவது சிக்கனமானதா என்பது தெரிந்துகொள்ளப்படவேண்டும்," என்று, போக்குவரத்து இலாகா உதவி மந்திரி ஒ. வி. அளகேசன் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

நகர்ப்புற இரயில்வேக்கள்

நெருக்கடியைத் தவிர்க்க விசாரணைக் குழு

புதுடில்லி, செப். 22—

பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய வட்டாரங்களில் ஓடும் நகர்ப்புற இரயில்வேக்களில் குறிப்பிட்ட சில நேரங்களில், பிரயாணிகள் கூட்டம் மிதமிஞ்சியிருக்கும் சிக்கலைத் தவிர்ப்பதற்காக இந்திய சர்க்கார், மூன்று அனுபவம் மிகுந்த இரயில்வே அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து. சிக்கலை ஆராய்ந்து, வழிவகை கூறுமாறு ஏற்பாடு செய்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

கடந்த உலகப்போர் துவங்கிய நேரத்தில் இருந்த இரயில் பிரயாணிகள் போக்குவரத்துடன், இப்போதுள்ள போக்குவரத்தை ஒப்பிட்டால் சென்னை சுற்றுப்புறத்தில் சுமார் 400 சதவிகிதம் இப்போதைய போக்குவரத்து உயர்ந்திருக்கிறது; பம்பாய், கல்கத்தா வட்டத்தில் 300 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது.

1940—41ல், சென்னை வட்டத்தில் 86 5 இலட்சம் பேர் இரயில் பிரயாணம் செய்தனர் என்றும், இப்போது சுமார் 260 இலட்சம் பேர் பிரயாணம் செய்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

சென்னை அமைச்சர்கள் சுற்றுப் பயணம்

செலவுத் தொகை விவரம்

சென்னை, செப் 21—

கடந்த ஆண்டில் (1954) எப்ரல் முதல் அக்டோபர் வரையுள்ள 7 மாதங்களில் மந்திரிகள் எவ்வளவு நாட்கள் சுற்றுப் பயணம் செய்தார்கள்—ஒவ்வொரு மந்திரிக்கும் எவ்வளவு செலவாயிற்று—என்று, சட்டசபையில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு நிதி மந்திரி சுப்பிரமணியம் பதிலளிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களைத் தெரிவித்தார்:—

முதலமைச்சர் காமராசர், 7 - மாதங்களில் மொத்தம் 58 நாட்கள் சுற்றுப் பயணம் செய்தார்; அதற்கான மொத்தச் செலவு அக்டோபர் மாதத்தில், அவருக்கு அதிகபட்சமாக ரூ 676-0-0 செலவாயிற்று.

அமைச்சர் ஏ. பி. ஷெட்டி 36 நாட்கள் சுற்றுப்பயணம் செய்தார்; ரூ. 2,540-7-0 செலவாயிற்று; ஆகஸ்டில் அவருக்கு அதிகபட்சம் ரூ. 990-6-0 செலவாயிற்று.

அமைச்சர் எம். பக்தவத்சலம் 99 நாட்கள் சுற்றுப்பயணம் செய்தார்; மொத்தம் ரூ 4,341-2-0 செலவு; செப்டம்பரில் அதிகபட்சம் ரூ. 1,028-14-0 செலவு.

அமைச்சர் சி. சுப்பிரமணியம் மொத்தம் 57 நாட்கள் சுற்றுப் பயணம் செய்திருக்கிறார்; ரூ. 2,260-1-0 செலவு; செப்டம்பரில் அதிகபட்சம் ரூ 592-12-0 செலவு.

அமைச்சர் எம். மாணிக்கவேலு மொத்தம் 74½ நாட்கள் சுற்றுப் பயணம் செய்திருக்கிறார்; ரூ. 3,713-7-0 செலவு; அக்டோபர் மாதம் அதிகபட்சம் ரூ. 846-7-0 செலவு.

அமைச்சர் சண்முக ராஜேசுவர சேதுபதி மொத்தம் 34 நாட்கள் சுற்றுப்பயணம் செய்திருக்கிறார்; ரூ. 3,537-10-0 செலவு; அதிகபட்சமாக அக்டோபர் மாதத்தில் ரூ. 955-4-0 செலவாகியிருக்கிறது.

அமைச்சர் பி. பரமேசுவரன் மொத்தம் 27 நாட்கள் சுற்றுப் பயணம் செய்திருக்கிறார். ரூ. 1,776-6-0 செலவு; அதிகபட்சமாக ஜூலை மாதம் ரூ. 528-10-0 செலவாகியுள்ளது.

அமைச்சர் எஸ் எஸ். இராமசாமி மொத்தம் 49 நாட்கள் சுற்றுப் பயணம் செய்திருக்கிறார். மொத்தம் ரூ. 3,007-14-0 செலவு; ஜூன் மாதத்தில் அதிகபட்சமாக ரூ. 820-10-0 செலவாகியுள்ளது.

இன்னும் சில திங்கள் காலத்திற்குள், கல்கத்தா, லண்டனுடன் நேரடியாக 'ரேடியோ டெலிபோன்' தொடர்புகொள்ள முடியும் என்று தெரியவருகிறது.

தாயைத் தந்தையெனக் குறிக்கும் வாக்காளர் பட்டியல்!

ஆயுட்காலம் முடிவதற்கு முன்பே சபைகளைக் கலைப்பதற்கு எதிர்ப்பு

தேர்தல் சட்டச் சீர்திருத்த மசோதா விவாதத்தில் மக்கள் சபை உறுப்பினர்கள் கோரிக்கை

தேர்தல் சட்டங்கள் திருத்த மசோதா பற்றி மக்கள் சபையில் விவாதம் நடைபெற்றபோது, உறுப்பினர்கள், பல்வேறு விதமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

பணக்காரர்களுக்குச் சாதகம் ஏற்படாதபடி தேர்தல் சட்டங்கள் இருக்க வேண்டுமென்றும், தேர்தல் காலத்தில் எல்லாக் கட்சிகளும் வானொலியை உபயோகிப்பதற்கு அனுமதிக்க வேண்டுமென்றும் தோழியர் ரேணுகா சக்ரவர்த்தி கூறினர்.

'உத்தியோக பூர்வமான முறையில் தேர்தல் சுற்றுப் பயணம் செய்வதற்கு அமைச்சர்களை அனுமதிக்கக் கூடாது,' என்று, எச். வி. காமத் சொன்னார்.

ஒவ்வொரு வாக்காளரும், தங்கள் வாக்குரிமையை அளித்தே தீர வேண்டுமென்று கட்டாய விதி இருக்க வேண்டுமென்றும், அவ்வாறு செய்யாதவர்களுக்குத் தண்டனை விதிக்க வேண்டுமென்றும் ஜெய்பால் சிங் என்ற உறுப்பினர் குறிப்பிட்டுவிட்டு, இந்தியாவின் தேர்தல் முறை ஜனநாயகத் தன்மைவாய்ந்ததல்லவென்றும், விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம்தான் ஜனநாயகப் பிரதிநிதித்துவமென்றும், வாக்காளர் பட்டியல்கள் இல்லாமல் கிராமப் பஞ்சாயத்துக்களே தேர்தலை நடத்தினால் செலவு குறையுமென்றும் கூறினர்.

தேர்தலில் நிற்கும் அபேட்சகர்களுக்குக் குறைந்தபட்சக் கல்வி யோக்கியதாம்சங்களாவது இருக்க வேண்டுமென்று பேராசிரியர் டி. சி. சர்மா எடுத்துச் சொன்னார்.

அபேட்சகர்களின் செலவுக்காக நிர்ணயித்துள்ள உச்ச அளவை ரூ. 25,000-த்திலிருந்து ரூ. 5,000 அல்லது ரூ. 7,000-த்திற்குக் குறைக்க வேண்டுமென்று லோகநாத மிஸ்ரா என்பவர் கேட்டுக்கொண்டார்.

ஒரு சாதாரண ஏழையும் தேர்தலில் அபேட்சகராக நிற்பதற்குரிய வகையில் தேர்தல் செலவுகள் குறைவாக இருக்கவேண்டுமென்றும், மற்ற அபேட்சகர்களுக்காக அமைச்சர்கள் பிரச்சாரம் செய்யக் கூடாதென்றும் பி. சி. தாஸ் என்பவர் கோரினர்.

தேர்தல் செலவுக் கணக்குகளை ஒப்படைக்கும் முறை இன்னும் சுலபமானதாக இருக்க வேண்டுமென என். எம் லிங்கம் என்பவர் கோரினர்.

வாக்காளர் பட்டியலில் அபேட்சகரின் பெயர் காணப்படாவிட்டாலும், அவரது தகுதிகள் திருப்திகரமாக இருந்தால், அவர் தேர்தலில் நிற்பதற்கு அனுமதிக்க வேண்டுமென்று பி. லக்ஷ்மய்யா என்பவர் கேட்டுக்கொண்டார்.

கட்டாய ஓட்டுமுறை வேண்டுமென்று வற்புறுத்திய பாலகிருஷ்ண சர்மா என்பவர், அனுபவ ரீதியில் பார்க்கையில், தேர்தல்களில் பாதிப் பேர்தான் வாக்களிக்கின்றனர் என்றும், 30 சத விகிதம் பேர்கள்தான் ஒரு கட்சியை அதிகாரத்திற்கு அனுப்ப முடிகிறதென்றும், எனவே, 'வாக்காளர்களில் 15 சதவிகிதம் பேர்கள்தான் நாட்டை ஆளுகிறார்கள்' என்ற நிலைமை ஏற்படுகிறதென்றும், இது ஜனநாயக முறையல்ல என்றும், கட்டாயமாக வாக்குரிமை அளிக்கும் முறை இருந்தால்தான் நம் நாட்டில் ஜனநாயக சர்க்கார் உள்ளதெனக் கருத முடியுமென்றும் குறிப்பிட்டார்.

'அபேட்சகர்களின் தேர்தல் செலவுக் கணக்கு' என்பது, வெறும் 'ஜோடனை' என்றும், அந்த முறையை ரத்து செய்துவிடலாமென்றும் கே எஸ் இராகவாச்சாரி என்பவர் சொன்னார்.

தேர்தல் பட்டியல் தயாரிப்பு முறையைக் கண்டித்த பூல்சிங்ஜி தாபி என்பவர், தாயைத் தந்தையென்றும், தந்தையை மகன் என்றும் பட்டியலில் குறிப்பிட்டுவிடுகிறார்கள் என்று சுட்டிக் காட்டினர்.

மேலும் பல உறுப்பினர்கள், தேர்தல் செலவுக் கணக்குகளைச் சமர்ப்பிக்க வேண்டுமென்ற முறையை ரத்து செய்துவிட வேண்டுமென்று வற்புறுத்தினர்; சில அபேட்சகர்களே சரியான கணக்குகளைத் தருகின்றனர் என்றும் கூறினர்.

'கட்சிகள் செய்யும் செலவு, அபேட்சகர்கள் கணக்கில் சேராது' என்ற பிரிவை ஆட்சேபித்த டாக்டர் எ. கிருஷ்ணசாமி, 'இப்பிரிவு சுயேச்சை அபேட்சகர்களின் நலனுக்கு உகந்ததல்ல; பொது வாழ்க்கையிலும், பார்லிமெண்டிலும் சுயேச்சை உறுப்பினர்களுக்கு முக்கியப் பங்கு உண்டு' என்று குறிப்பிட்டார்.

தேர்தல் காலத்தில் நடைபெறும் காலித்தனம், நிர்ப்பந்தத் தூண்டுதல்கள், ஊழல்கள் பற்றி விசாரிக்க, தனிப்பட்ட அதிகாரிகளைத் தேர்தல் குழு நியமிக்க வேண்டுமென்று பட்னா மகாராஜா வேண்டிக்கொண்டார்.

கட்சிகள் ஒன்றுக்கொன்று அவதூறாகப் பேசுவதையும், வசைமாரி பொழிவதையும் தடுக்க வேண்டுமென்று பி. எஸ். மூர்த்தி கோரினர்.

'நியாயமாகவும், நேர்மையாகவும் தேர்தல்கள் நடப்பதற்கு, தேர்தல் அதிகாரம் முழுமையும் அரசியல் சம்பந்தமற்ற கவர்னரிடம் இருப்பது நல்லதாகும்,' என்று, பி. இராமச்சந்திர ரெட்டி வற்புறுத்தினர்.

வாக்காளர்களாகப் பெண்களைச் சேர்ப்பதற்குத் தனியாகப் பெண்களை நியமிக்க வேண்டுமென்று தோழியர் சுசாமா சென் கோரினர்.

சர்க்காருடன் பெரிய 'காண்டிராக்டி'ல் ஈடுபட்டிருந்தாலன்றி, சட்டசபை உறுப்பினரைத் தகுதியற்றவராகக் கருதக்கூடாதென்றும், இப்பிரச்சினையில் விதிகளைத் தளர்த்த வேண்டுமென்றும் கோரிய டாக்டர் எ. கிருஷ்ணசாமி, சட்ட சபைக்கும்—மக்கள் சபைக்கும் ஒரே காலத்தில் தேர்தல் நடத்த வேண்டுமென்ற காரணத்திற்காக ஐந்தாண்டு ஆயுள் காலம் முடிவடைவதற்கு முன்னரே சபைகளைக் கலைப்பது அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று குறிப்பிட்டார்.

சர்க்கார் நிர்வாக அதிகாரிகளின் குறுக்கீடு இல்லாமல் தேர்தல்களை நடத்துவதற்கு ஒவ்வொரு மாநிலத்திலும் 'தேர்தல் குழு'வினருக்குக் கீழ் 3 அல்லது 4 தேர்தல் அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டுமென்று வி. ஜி தேஷ்பாண்டே கூறினர்.

'அபேட்சைப் பத்திரம் நிராகரிக்கப்பட்டால், அந்த அபேட்சகருக்கு அப்பீல் செய்வதற்கு உரிமை வேண்டும்,' என்று எம் பி. மிஸ்ரா கோரினர்.

'அபேட்சைப் பத்திரங்களை நிராகரித்தது அல்லது ஏற்றது முறையல்ல,' என்பது போன்ற விவகாரங்களை விசாரிப்பதற்கு 'இடைக்காலத் தேர்தல் கோர்ட்டு'கள் நியமிக்கலாமென்று தேச்சந்த் என்பவர் யோசனை கூறினர்.

'உணவைப் பறிக்கும் பூதம்' என இயந்திரங்களை உடைத்தவர்கள்!

சிந்தனை மாற்றத்தால் தானே இயங்கும் இயந்திர சாதனங்களை வரவேற்கின்றனர்!

தொழிற்சாலைகளில் தானே இயங்கும் இயந்திர சாதனங்கள் பெருகி வருவதைக் கண்டு, பிரிட்டிஷ் தொழிலாளர்கள் அஞ்சவில்லை; உற்பத்திச் சக்தியும், உற்பத்திச் சக்தி விகிதமும் அதிகரிப்பது அவசியமென்றே அவர்கள் கருதுகிறார்கள்.

சமீப ஆண்டுகளில், தொழில் உலகில், மாபெரும் 'புரட்சி' ஏற்பட்டிருக்கிறது. 'தொழில் நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்குப் பயிற்சியிருந்தால்தான் உற்பத்திச் சக்தி பெருகும்' என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள்; தொழிலாளர்களும், நிர்வாகிகளும் கலந்தாலோசித்துத் திட்டம் வகுக்கிறார்கள்.

தானே இயங்கும் இயந்திரங்களால், உற்பத்தி அதிகரிக்கக் கூடுமென்றாலும், மனித சக்தி சோம்பிவிடுமோ— வேலையில்லாத் திண்டாட்டம் தோன்றுமோ— என்ற சந்தேகம் ஒருசாராருக்கு உண்டு. தானே இயங்கும் இயந்திரங்களை உபயோகிப்பதால் ஏற்படும் பலாபலன்களை ஆராய தொழிலாளர் தலைவர்கள் ஆவன செய்திருக்கிறார்கள்.

தொழிலாளர்களுடைய தலைமுறையில் சிந்தனை மாற்றமேற்பட்டிருக்கிறது. தற்காலத் தொழிலாளர்களுடைய மூதாதையர்கள், லங்காஷயரில் துணி ஆலைகள் ஏற்பட்டபோது, 'தங்களுடைய உணவைப் பறிக்கும் பூதம் இவை' என வெகுண்டு, இயந்திரங்களை உடைத்து எறிந்தார்கள்.

அணுசக்தியும், மின் அணுச் சாதனங்களும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் சாதனங்களா, அல்லது, வேலையில்லாத் திண்டாட்டத்தை உரமிட்டு வளர்க்கக் கூடியவையா—என்ற சந்தேகம், சென்ற தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்கு இருந்தது. இந்தத் தலைமுறையைச் சேர்ந்த தொழிலாளர்களோ, விஞ்ஞான மாறுதல்களைக் கண்டு பயப்படவில்லை; ஆனால், திடீரெனச் செய்த முடிவுமல்ல; நீண்டகால ஆராய்ச்சிக்குப் பிறகு செய்த முடிவு. இந்தப் பிரச்சினைகளைப் பற்றி, தொழிலாளர் தலைவர்கள் பொறுமையுடன் ஆராய்ந்து விவாதித்து முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

உடலுழைப்பு அதிகமின்றி, சுலபமாக அதிக ஊதியம் பெறும் நோக்கத்துடன், தானே இயங்கும் இயந்திர சாதனங்களை தொழிற்சாலைகளில் புகுத்தத் தொழிலாளர்கள் சிபாரிசு செய்யவில்லை. இவைகளினால் ஏற்படக்கூடிய நன்மை-தீமைகளைப் பற்றி தொழிலாளர் தலைவர்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள். தொழிலாளர் நலன், தேசநலன், சர்வதேச நலன் ஆகியவற்றை மனதில் கொண்டே, ஆராய்ந்து சிபாரிசு செய்திருக்கிறார்கள். உற்பத்திப் பெருக்கம் அவசியம் என்பதை தொழிலாளர்களும், தொழில் அதிபர்களும் ஏற்றுக்கொள்கிறார்கள்; உற்பத்திப் பெருக்கத்திற்குத் துணையாக, தானே இயங்கும் இயந்திர சாதனங்கள் இருக்கின்றன; நன்மைகளைக் காண முடிகிறது; தீமைகளைக் களைய ஆராய்ச்சி உண்டு; அதனால்தான் ஆதரவும் கிடைத்திருக்கிறது.

'மறைந்தவை பற்றிக் கவலை வேண்டாம்'

'மறையாத இலக்கியங்களைப் போற்றுவோம்-இறவாத இலக்கியங்களை இயற்றுவோம்'

பேராசிரியர் இலக்குவனர் வேண்டுகோள்

"தமிழ் மொழியில் மிகவும் தொன்மையான நூல் தொல்காப்பியமாகும்; அதுவும் ஓர் இலக்கண நூலாகும். தொல்காப்பியத்திற்கு முன் பல இலக்கியங்கள் முத்தமிழிலும் இருந்திருக்க வேண்டும். ஆனால் அந்நூல்களெல்லாம் இன்று எங்கே? அவை மறைந்தன — மறைக்கப்பட்டன. எப்படி? கடல்கோள், கறையான், கருத்து வேறுபாடு, நீர், நெருப்பு, சமண-பௌத்த சமயக்கோட்பாடு முதலியவற்றால் அழிந்தன;

"மறைந்துபோன இலக்கியங்கள் பற்றிக் கவலைப்பட்டுப் பயனில்லை; ஆனால் இருந்தும் இன்று மறைவாகஉள்ள இலக்கியங்களைப் போற்றிப் பயின்று, அழிந்துபடாமல் ஓம்பி, இறவாத இலக்கியங்கள் பல இயற்றல்வேண்டும். மொழியை வளம்பெறச் செய்யவேண்டின் நம் தமிழகம் சிறப்புறவேண்டும். அப்பொழுதுதான் உலக அரங்கில் நம் இலக்கியங்கள் தலை நிமிர்ந்து உலவ முடியும்."

—என்று, பேராசிரியர் சி. இலக்குவனர் அவர்கள், புதுக்கோட்டை திருக்குறள் கழகத்தின் சார்பில் 18—9—55 மாலை, நகர் மன்றத்தில் நடைபெற்ற இலக்கியக் கூட்டத்தில் 'மறைந்த இலக்கியங்கள்' எனும் பொருள் பற்றிப் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

2,500 கைவண்டித் தொழிலாளர்

1 நாள் அடையாள வேலைநிறுத்தம்

அகமதாபாத், செப். 24—

"1,200 பவுண்டு எடைக்கும் அதிகமான சாமான்களை இழுத்துச் செல்லக் கூடாது," என்று மாவட்ட நீதிபதி விதித்த தடை உத்தரவை எதிர்த்து, சுமார் 2,500 கைவண்டித் தொழிலாளர்கள், வரும் திங்களன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்ய திட்டமிட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

விதிக்கப்பட்ட அளவுக்கு அதிகமான எடைச் சாமான்களை இழுத்துச் சென்றதற்காக, ஏற்கனவே சுமார் 200 கைவண்டித் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

வரும் திங்களன்று, காலிவண்டிகள் சகிதம், இந்தத் தொழிலாளர்கள், நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலம் வருவர் என்று தெரிகிறது.

சுமார் 2,500 பவுண்டு எடையுள்ள சாமான்களை கைவண்டி மூலம் எடுத்துச் செல்ல முடியும் என்றும், அதனால் சாலைக்கு எந்த விதக் கேடும் நிகழாது — போக்குவரத்திற்கும் இடைஞ்சல் இருக்காது என்று அவர்கள் கூறுகின்றனர்.

குஜராத்தி வர்த்தக கழகம்கூட, அண்மையில், 'கைவண்டி மூலம் எடுத்துச் செல்லப்படும் பொருள்களின் அளவு 2,500 பவுண்டுக்கு மேல் இருக்கக் கூடாது என விதிக்கலாம்,' என்று யோசனை தெரிவித்தனர்.

'நிபந்தனைகள் பேரில் விடுதலை தேவையில்லை'

கபார்கான் அறிவிப்பு

கராச்சி, செப். 23—

இப்போது பலுசிஸ்தானில் உள்ள மாச் மத்திய சிறையில் காவல் வைக்கப்பட்டிருக்கும் செஞ்சட்டைத் தலைவரான கான் அப்துல் கபார்கான், 'நிபந்தனைகளின் பேரில் தனக்கு விடுதலை தேவை இல்லை' என்று மறுத்துவிட்டாராம்!

பாகிஸ்தான் சர்க்கார் அவருக்கு சில நிபந்தனைகள் பேரில் விடுதலை வழங்குவதாகத் தெரிவித்ததை மறுத்து விட்டதுடன், நீதிமன்றத்தில் தன்மீது வழக்குத் தொடரப்படுமானால், எதிர்த்து வழக்காடவும் தான் தயாராக இருப்பதாக கபார்கான் அறிவித்திருக்கிறார்.

மாச் சிறையிலேயே அவரை விசாரிக்க ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும், சிவி மாவட்ட உதவி அதிகாரி ஒருவர் அவரையும், அவரது இரு சகாக்களையும் விசாரிப்பார் என்றும் கூறப்படுகிறது.

'அஞ்சுமன் பக்தூன் பாகிஸ்தான்' என்ற நிறுவனத்தின் தலைவரான கான் அப்துல்லாகான், செஞ்சட்டைத் தலைவர் கைது செய்யப்பட்டதை எதிர்த்துக் குரல் கொடுத்திருக்கிறாராம்.

இலங்கைப் பிரதமர் வாக்குறுதி

'தமிழும் அரசாங்க மொழியாக இருந்துவரும்'

கொழும்பு, செப். 23—

"தொடர்ந்தாற்போன்று சிங்களமும், தமிழும் இலங்கையின் அரசாங்க மொழிகளாக இருந்து வரும்,"

என்று, இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை வாக்குறுதி அளித்துள்ளார்.

கடந்த கால மக்கள் தொகைக் கணக்குப்படி, இலங்கையில் சிங்கள மொழி பேசுவோர் எண்ணிக்கை 55 இலட்சமென்றும், தமிழ் மொழி பேசுவோர் தொகை 15 இலட்சம் என்றும், இவர்களைத் தவிர இந்திய வம்சா வழியினர் 15 இலட்சம் பேர் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

கைவேலைப்பாட்டுத் தொழில்கள் வாரம்

கைநுட்பத் தொழில்களின் சிறப்பை விளக்கும்

புதுடில்லி, செப். 24—

நாட்டில் தற்சமயம் இருந்து வரும் பலவித கைவேலைப்பாட்டுத் தொழில்களின் மீது தேசத்தின் கவனத்தைத் திருப்புவதற்காக இந்தியாவிலுள்ள 23 மாநிலங்களில், இன்று முதல் ஒரு வாரம் விழா நடைபெறுகிறது. நிகழ்ச்சிகளில் கைவினைஞர்கள் மாநாடு நடத்துவதற்கு முதல் முதலாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் 26 மாநிலங்களிலும் இலட்சக்கணக்கான குடிசைத் தொழிலாளர்கள் பாரம்பரிய சாமர்த்தியத்துடன் பல தொழில்களைச் செய்துவருகின்றனர்; இதனால்தான், நம் நாட்டு கைவேலைப்பாட்டுத் தொழில் உற்பத்திப் பொருள்களில் பல ரகங்களும், விதங்களும் இருந்து வருகின்றன. எந்த இயந்திரத்தாலும் இவைகளைச் செய்ய முடியாது; இதனால்தான், இந்தியக் கைத்தொழில் வினைஞர்களின் வேலைத் திறமை வெகு காலமாகவே உலகம் முழுவதும் பிரசித்தி பெற்று வந்திருக்கிறது. இவ்வளவு தேர்ச்சியும் திறமையும் இருந்தும்கூட, நாடு அடிமைப்பட்டதின் காரணமாகவும், இயந்திர யுகம் தோன்றி பெருவாரி உற்பத்தி ஏற்பட்டதன் விளைவாகவும் இலட்சக்கணக்கான இந்தக் கைவினைஞர்களின் நிலைமை தாழ்வடைந்துவிட்டது; இவர்கள், தரித்திர நிலைமையை எய்திவிட்டார்கள்.

ஆனால், நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், இப்பிரச்சினைக்குப் பரிகாரம் காண்பதென்று முடிவு செய்யப்பட்டது; தேசியப் பொருளாதாரத்தில், இவ்வேலையாளர்களுக்கு உரிய இடத்தைக் கொடுத்து, மாறுபட்டுள்ள போக்குக்கும், நிலைமைகளுக்குமேற்ப இவர்களும் தங்கள் வேலை முறைகளை மாற்றிக்கொள்ள உதவவும் தீர்மானிக்கப்பட்டது.

மலை உச்சியில் மனிதக் கூடுகள்

'பனிச் சரிவு'க்கு 200 'யாத்திரீகர்கள்' பலி?

பனிமூடிக் கிடக்கும் இமாலயச் சிகரமொன்றில் உறைந்து கிடக்கும் 'ரூப்கண்ட்' ஏரியின் அடிவாரத்தில், ஏராளமான மனிதப் பிரேதங்கள் அலங்கோலமாகப் புதைந்து கிடக்கின்றன — என்று, செய்திகள் கூறுகின்றன.

உருக்குலைந்து புதைந்துள்ள அப்பிரேதங்கள் — ஆண், பெண், குழந்தைகள் உட்பட — 200 இந்திய 'யாத்ரீகர்'களுடையது எனக் கருதப்படுகிறதாம்.

ஏரியின் அடிவாரத்திற்கு அந்த 'யாத்திரீகர்'கள் வருகையில், ஒரு பிரம்மாண்டமான 'பனிச் சரிவு' ஏற்பட்டு அவர்கள் மாண்டிருக்கக் கூடுமெனக் கருதப்படுகிறது.

கொள்ளையடிப்பதிலும் 'குண விசேடம்'

குவாலியர், செப் 23—

'நாங்கள் சர்க்கார் பணத்தைக் கொள்ளையடிக்க மாட்டோம்,' என்று, பஸ் ஒன்றை வழிமறித்துக் கொள்ளையிட்ட கொள்ளைக்காரர்கள் கூறினராம்!

இங்கிருந்து 130 மைல் தொலைவில் உள்ள ஷியோபூர் என்ற இடத்தில், மத்திய பாரத் சர்க்கார் நடத்தும் பஸ் ஒன்றை ஆயுதந் தாங்கிய கொள்ளைக்காரர்கள் வழி மறித்தனர்.

'கண்டக்டரி'டம் எவ்வளவு பணம் இருக்கிறது என்று கேட்டனர்; சுமார் ரூ. 50 இருக்குமென்று அவர் தெரிவிக்கவே, அவரையோ பஸ் ஓட்டுபவரையோ எதும் செய்யாமல் விடுத்துவிட்டனர்.

அந்த வண்டியில் இருந்த அத்தர் வியாபாரி ஒருவரை இவர்கள் எதும் செய்யவில்லை; அவரிடமிருந்த பலவகை அத்தர்களையும் அவர்கள் அனுபவித்துவிட்டு, அவருக்கு பரிசாக ரூபாய் பத்தும் தந்தனராம்!

தற்போது இந்தியாவில் மொத்தம் 1,168 ஐ. ஏ. எஸ். அதிகாரிகளும், 651 ஐ.பி.எஸ். அதிகாரிகளும் இருக்கின்றனராம்; இரு துறைகளிலும் உள்ள 9 பேர் மட்டுமே இந்தியரல்லாதவர்களாம்.

'இந்தி இந்தியாவின் தேசீயமொழி அல்ல!'

சட்டசபையில் மந்திரி சுப்பிரமணியம் விளக்கம்

சென்னை, செப். 23—

"எனக்குத் தெரிந்தவரையில், இந்தி, இந்தியாவின் 'தேசிய மொழி'யாகும் பிரச்சினையே இப்பொழுது ஏற்படவில்லை; அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 14 - தேசிய மொழிகளுள் இந்தியும் ஒன்றாகவே இருக்கும்; இப்பொழுது பரிசிலனையில் இருப்பதெல்லாம், 'இந்தி, இந்தியாவின் நிர்வாக மொழியாக இருக்க முடியுமா?' — என்பதுதான்; இதுபற்றி ஒரு விசாரணைக் குழு, பல பிரச்சினைகளையும் விசாரணை செய்து வருகிறது; அக்குழு வெளியிட்டுள்ள 'கேள்வித் தாள்' சபையில் வைக்கப்பட்டு, விவாதிப்பதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படும்; சபையின் கருத்தை அறிந்த பின்புதான், குழுவினருக்கு, சர்க்காரின் கருத்து அறிவிக்கப்படும்,"

என்று, கல்வி அமைச்சர் சுப்பிரமணியம், சட்டசபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

சபாநாயகர் பதவிக்கு மனு தாக்கல்

சென்னை, செப் 23—

செப். 27-ந் தேதியன்று சென்னை சட்டசபை சபாநாயகர் தேர்தல் நடைபெறும். இந்தப் பதவிக்கு, சட்டசபை உறுப்பினரான திரு. ஏ. இரத்தினம் என்பவர், முதல் அபேட்சகராக இன்று, அபேட்சை மனு தாக்கல் செய்துள்ளார்.

நேபாளத்தில் புதிய கட்சி!

டாக்டர் சிங்கின் சகாக்கள் துவங்குகின்றனர்

காலிம்பாங், செப். 23—

சீனத்திலிருந்துதாயகம் திரும்பியுள்ள டாக்டர் சிங், தான் இன்னும் பல மாதங்களுக்கு அரசியலில் ஈடுபடப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறார்; ஆனால், அவரது சகாக்கள், 'நேபாள காங்கிரஸ் ஜனநாயக முன்னணி' என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றைத் துவக்கியுள்ளனர் என்று தெரிகிறது.

மன்னரின் அரசியல் தலைமையின்கீழ், நேபாளத்தில் ஒரு பொறுப்பாட்சி அமைப்பது; நேபாள மக்களுக்கு முழுவதும் அமைதியான முறையிலேயே சிவில், பொருளாதார, மத, சமூக உரிமைகளைப் பெற்றுத் தருவது — என்பவையே அப்புதிய கட்சியின் நோக்கம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

****

திராவிட நாடு பிரிவினை வாரம்

25—9—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு

சென்னை—அண்ணா பிள்ளைத் தெருவில்

(கொத்தவால்சாவடி அருகில்)

மாபெரும் பொதுக்கூட்டம்

தோழர் கோ. செங்குட்டுவன் தலைமையில்

தோழர்கள் இளம்பரிதி, டி. சண்முகம் எம்.எல்.ஏ.,

அண்ணாதுரை

ஆகியோர் பேசுவர்

—சென்னை 14-வது வட்ட தி. மு. கழகம்

****

தென் இரயில்வே நான்காந்தர ஊழியர்கள் மாநாடு

26-9-55 மாலை 4½ மணிக்கு, சென்னை — இராயபுரம் இரயில்வே இன்ஸ்டிட்டியூட் மைதானத்தில், திரு. வி. கே. ராமன் தலைமையில் நடைபெறும். தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், திருவாளர்கள் எஸ். சி. சி. அந்தோனி, டி. செங்கல்வராயன், பி. வரதராஜுலு, ஜி. எல். நரசிங்கம், சி. ஜி. எஸ். சுந்தரம் ஆகியோர் பேசுவர்.

70 - ஆண்டுகள் வாழ்வார்களாம்!

இன்று, பிறக்கும் அமெரிக்க மக்கள் பொதுவாக ஏறக்குறைய எழுபது ஆண்டுகள் வாழ்வார்களாம்!

1954-ல் பிறந்தவர்கள் 69.8 ஆண்டுகள் வாழ்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்!

1889-ம் ஆண்டுக் கணக்கின்படி ஆயுட்காலம் 34 ஆண்டுகளாகும்.

செய்திகள் பறக்கின்றன!

அமெரிக்கத் தலைவர் ஐசனோவருக்கும், பிரிட்டிஷ், பிரெஞ்சுப் பிரதமர்களுக்கும், சோவியத் பிரதமர் புல்கானின் செய்திகள் அனுப்பியிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

ஆயுதக் குறைப்புப் பேச்சு வார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்படாததைக் குறித்து, புல்கானின் அக்கடிதத்தில் வருத்தம் தெரிவித்திருக்கக்கூடும் என செய்திகள் கூறுகின்றன.

வரி விதிப்பு இல்லாது நிசாமிடம் 40 கார்கள்!

ஐதராபாத், செப் 23—

ஐதராபாத் இராஜப்பிரமுகரான நிசாமிடம் சுமார் 40 மோட்டார் வண்டிகள் இருப்பதாயும், அவற்றிற்கு எந்தவித வரியும் அவரிடமிருந்து வசூலிக்கப்படுவதில்லை என்றும், சட்டசபையில் அமைச்சர் கோபாலராவ் தெரிவித்திருக்கிறார்.

நகரசபைக்கு ஆண்டு தோறும் மொத்தமாக ரூ 42,857 வரிகளுக்குப் பதிலாக நிசாம் தந்துவிடுவதாயும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஆணாக மாறிய குமாரி கமலா!

ஐதராபாத், செப். 23—

பத்து வயது நிரம்பிய குமாரி கமலா என்ற பெண்ணுக்கு 'பால் மாற்றம்' ஏற்பட்டிருக்கிறதாம்!

மகபூப் மெஹந்தி என்ற இடத்தைச் சேர்ந்த அந்தப் பெண்ணின் தந்தையான சீனிவாச மூர்த்தி என்பவர், "இந்தப் 'பால் மாற்றம்,' எந்த செயற்கை அறுவை வைத்திய முறையாலும் ஏற்படுத்தப்படவில்லை — இயற்கையாகவே நிகழ்ந்துள்ளது," என்று தெரிவித்திருக்கிறார்.

தி. மு. க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன் குடியேற்றம் வருகை

★

27—9—55 மாலை 6 மணிக்கு, குடியேற்றம் ஆற்றில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றுவார். அதுபோது, மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

பிரிவினை முழக்கம்

★

திருமழிசை

பெருமாள் கோவிலுக்கு அருகில்

24—9—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: டி. கே. ஜோதூரான்

பேசுவோர்:

டி. கே. சீனுவாசன்

டி. சண்முகம் எம்.எல்.ஏ.

கே. டி. எஸ். மணி

★

செங்கோட்டை

வண்டிமலச்சி அம்மன் கோவில் முன்பு

27—9—55 இரவு 7 மணிக்கு

தலைவர்: மு. அருணாசலம்

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

வி. புகழேந்தி

மஜீத் மன்றத் துவக்க விழா

★

27—9—55 மாலை 5½ மணிக்கு, திருத்துறைப்பூண்டி வாணக்காரத் தெருவில், மஜீத் மன்றத் துவக்க விழாவும், திராவிட நாட்டுப் பிரிவினை வாரமும் நடைபெறும். தோழர்கள் என் எஸ் இளங்கோ, மு அ செங்குட்டுவன், டி. எஸ். கல்யாணசுந்தரம் ஆகியோர் பேசுவர்.

குடந்தை நகர தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

★

25—9—55 மாலை 6 மணிக்கு, குடந்தை நகர தி மு. கழக செயற்குழுவும், இளைஞர் தமிழ் மன்ற உறுப்பினர் அவையும், துவரங்குறிச்சி பஜனை மடத்தில் நடைபெறும்.

'எழுச்சி'—நாடகம்

★

25—9—55 இரவு 10 மணிக்கு, சென்னை—வண்ணை, சிங்காரத் தோட்டம், அலுமினியம் பாக்டரி எதிரிலுள்ள கொட்டகையில், மதுரை குன்றன் கூத்து மன்றத்தாரின், 'எழுச்சி' என்னும் நாடகம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.